செய்தி வெளியீடு எண் : 1053 நாள் : 26.07.2024

# செய்தி வெளியீடு

## 16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்பட போட்டியில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் "கலர்ஸ் ஆஃப் கோலிவுட் – எ மெலனின் டெஃப்ஷியன்சி" (Colours of Kollywood – A Melanin Deficiency) என்ற ஆவண குறும்படம் திரையீட்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது

16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டி கேரளாவில் 26 ஜூலை 2024 முதல் 31 ஜூலை 2024 வரை நடைபெற்று வருகிறது. இந்த சர்வதேச ஆவணம் மற்றும் குறும்பட போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திரைக்கலைஞர்கள் இந்திய அளவில் பல்வேறு மாநிலங்களிலிருந்து எண்ணற்ற குறும்படங்கள் போட்டியிட்டனர்.

இதில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த இளங்கலை காட்சிக்கலை (Bachelor of Visual Arts) மாணவியான செல்வி.பரோ சலில் இயக்கிய ஆவண குறும்படம் "கலர்ஸ் ஆஃப் கோலிவுட் – எ மெலனின் டெஃப்ஷியன்சி" (Colours of Kollywood – A Melanin Deficiency), 22 ஆவண குறும்படங்களில் ஒன்றாக திரையீட்டிற்காக அதிகாரப்பூர்வ பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த கலர்ஸ் ஆஃப் கோலிவுட் – எ மெலனின் டெஃப்ஷியன்சி ஆவணப் படம் வெள்ளை சருமத்தில் மீதான விருப்பம் இந்தியர்களின் ஆழ்மனதில் பதிந்துள்ளது, தமிழ் சினிமாவும் இதற்கு விதிவிலக்கல்ல. தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களுடனான உரையாடல் மூலம் இந்த ஆவணப்படம் இதை ஆய்வு செய்கிறது. குறிப்பாக தமிழ் நடிகைகள் குறித்து ம் இந்த ஆவணப்படம் பேசுகிறது.

இந்த ஆவணக்குறும்படத்தில் தேசிய விருதுப் பெற்ற இயக்குநரான திரு. க. ஹரிஹரன், விளம்பர திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் புகைப்படக் கலைஞர் திரு.நரேஷ் நில், சர்வதேச விருது பெற்ற நடிகை மியா மெல்சர் மக்கள் தொடர்பாளரான செல்வி. கவிதா இம்மானுவேல், ஜே என் யூ மாணவியான செல்வி ஹருஷிக்கா , திரைப்பட இயக்குநர் மற்றும் விரிவுரையாளர் திரு.மணி ஷங்கர் நாராயணன் உள்ளிட்ட பலர் தங்களது கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.

இந்த ஆவணக்குறும்படத்தை இந்நிறுவன மாணவர்களான செல்வி பரோ சலில் இயக்கியுள்ளார். ஒளிப்பதிவை செல்வன் அக்ஷய் பரூனோன் என்பவரும், ஆடியோகிராப்பியை சுப்பிரமணியபாரதி என்பவரும், படத்தொகுப்பை செல்வன் கோபிகிருஷ்ணன் என்பவரும் எண்மிய இடைநிலை பணிகளை செல்வன் அருண்ராஜ் என்பவரும் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பணிகளை செல்வின் தக்ஷின் என்பவரும் கையாண்டுள்ளனர். இந்த ஆவணக்குறும்படத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தயாரித்ததாகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu